பத்திரிக்கை வெளியீடு - PRESS RELEASE

इंडिया ரிசர்வ் வங்கி

இந்திய ரிசர்வ் வங்கி
RESERVE BANK OF INDIA

இணையதளம் : www.rbi.org.in/தமிழ்
Website : www.rbi.org.in
மின்னஞ்சல் /email : helpdoc@rbi.org.in

தகவல் தொடர்புத் துறை, மத்திய அலுவலகம், ஷாஹித் பகத் சிங் மார்க், கோட்டை, மும்பை-400001 தொலைபேசி: 022-22660502
Department of Communication, Central Office, Shahid Bhagat Singh Marg, Fort, Mumbai-400001 फोन/Phone: 022- 22660502

17 ஜனவரி 2025

# பத்திரிக்கை வெளியீடு

**தமிழ்நாடு, மூக்குப்பீறி கூட்டுறவு நகர்ப்புற வங்கி மீது இந்திய ரிசர்வ் வங்கி பண அபராதம் விதிக்கிறது**

இந்திய ரிசர்வ் வங்கியின், 'மேற்பார்வை செயல் கட்டமைப்பு', 'இயக்குநர்கள், அவர்களின் உறவினர்கள் மற்றும் நிறுவனங்கள் / அவர்கள் ஆர்வமுள்ள நிறுவனங்களுக்கு வழங்கப்படும் கடன்கள் மற்றும் முன்பணங்கள்' மற்றும் 'உங்கள் வாடிக்கையாளரை அறிந்துகொள்ளுங்கள்' விதிமுறைகளின் கீழ் வழங்கப்பட்ட சில உத்தரவுகளை கடைபிடிக்காததற்காக இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ), ஜனவரி 03, 2025 தேதியிட்ட உத்தரவின் மூலம், மூக்குப்பீறி கூட்டுறவு நகர்ப்புற வங்கி (வங்கி) மீது ₹1.75 லட்சம் (ரூபாய் ஒரு லட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்) அபராதம் விதித்துள்ளது. இந்த அபராதமானது, இந்திய ரிசர்வ் வங்கி, 1949 ஆம் ஆண்டு வங்கியியல் ஒழுங்குமுறைச் சட்டத்தின் பிரிவு 47 A (1) (c) உடன் இணைந்த பிரிவு 46 (4) (i) மற்றும் பிரிவு 56-இன் கீழ் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி விதித்துள்ளது.

மார்ச் 31, 2023 தேதியில் வங்கியின் நிதி நிலை அடிப்படையில் இந்திய ரிசர்வ் வங்கி சட்டபூர்வ ஆய்வு நடத்தியது. மேற்பார்வைக் கண்டுபிடிப்புகள் அறிக்கையை ஆய்வு செய்ததில், மேலே மேற்கோள் காட்டப்பட்ட ரிசர்வ் வங்கியின் அறிவுறுத்தல்கள் மற்றும் அது தொடர்பான கடிதங்களின் அடிப்படையில், இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றாததற்காக வங்கி மீது ஏன் அபராதம் விதிக்கப்படக்கூடாது என்பதற்கான காரணத்தைக் கூற அறிவுறுத்தி அறிக்கை அனுப்பப்பட்டது. இந்திய ரிசர்வ் வங்கியின் அறிக்கைக்கு வங்கியின் பதில் மற்றும் தனிப்பட்ட விசாரணையின் போது பெறப்பட்ட வாய்வழி சமர்ப்பிப்புகள் ஆகியவற்றை பரிசீலனை செய்த போது, வங்கி, இந்திய ரிசர்வ் வங்கியின் பின்வரும் உத்தரவுகளுக்கு கட்டுப்படாதது நிரூபிக்கப்பட்டதால், பண அபராதம் விதிக்கப்படவேண்டும் என்ற முடிவுக்கு இந்திய ரிசர்வ் வங்கி வந்தது:

(i) வங்கி, வாராக்கடன் அளவு அதிகமாக உள்ள துறைகளில் 'மேற்பார்வை செயல் கட்டமைப்பின்' கீழ் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களைப் பின்பற்றாமல் அதன் வெளிப்பாட்டை அதிகரித்தது
(ii) வங்கி, இயக்குநர் தொடர்பான கடன்களை அனுமதித்தது
(iii) வங்கி, நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் குறிப்பிட்ட சில வாடிக்கையாளர்களின் KYC தரவுகளை மத்திய KYC பதிவேட்டில் பதிவேற்றவில்லை.

**இந்த நடவடிக்கை ஒழுங்குமுறை இணக்கத்தின் குறைபாடுகளை அடிப்படையாகக் கொண்டது. இது வங்கி அதன் வாடிக்கையாளர்களுடன் கையெழுத்திட்ட எந்தவொரு பரிவர்த்தனை அல்லது ஒப்பந்தத்தின் செல்லுபடியை பாதிக்கும் நோக்கத்துடனானதல்ல. மேலும், இந்த பண அபராதம் விதிக்கப்படுவது, வங்கிக்கு எதிராக ரிசர்வ் வங்கியால் தொடங்கப்படும் வேறு எந்த நடவடிக்கைக்கும் பாரபட்சம் இல்லாமல் இருக்கும்.**

**(புனீத் பஞ்சோலி)**

**பத்திரிகை வெளியீடு: 2024-2025/1953** தலைமை பொது மேலாளர்